OS NO. 124/2017 05.11.2024

**PW2 உதயன்**

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு இரண்டாம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்று கூறியுள்ள நிலையில் எவ்வாறு எனக்குத் தெரியும் என்றால் வாதி என் பக்கத்து ஊர்க்காரர். வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி பிரதிவாதி மனோகரனுக்கு ஒரு கிரைய உடன்படிக்கை எழுதிக் கொடுத்து அதன்படி நடக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். முதல் விசாரணை சாட்சியத்தில் கிரைய உடன்படிக்கை மற்றும் அதிகார பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளதாக கூறியுள்ளேன். அதே சொத்துக்களை பொறுத்து என் பெயரில் ஒரு அதிகார பத்திரம் இரண்டாம் பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் என்னிடம் காட்டப்பட்டுள்ள காட்டப்படுகிறது. அந்த ஆவணம் EX B2. மேற்படி சொத்தை நான் கிரையம் செய்ய ஒப்புக்கொண்டு பாபு என்பவர் உடன் ஒரு கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். அந்த கிரைய உடன்படிக்கை என் முன் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் EX B3. பின்பு எனக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் ரத்து செய்யப்பட்டது. பத்திரம் என் முன் காட்டப்படுவது தான். அந்த ஆவணம் EXB4. மேற்படி ரத்து பத்திரத்தில் மனோகர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். பத்திரத்தில் மனோகர் தன் முகவரியாக கீழ் ஆலத்தூர், வேலூர் என்று காட்டியுள்ளார். 07.10.2015 தேதியிலேயே என் பெயருக்கு எழுதிக் கொடுத்த போது அதிகாரத்து பத்திரமும், ஒன்றாம் பிரதிவாதி பெயருக்கு இரண்டாம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரமும், ஒன்றாம் பிரதிவாதி வாதிப் பெயருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரமும் பதிவானது என்றால் சரிதான். வாதியின் பத்திரத்தில் நானும் எனது பத்திரத்தில் வாதியும் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் பாபு பெயரில் எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் மூலம் பெற்ற ரூபாய் இரண்டு லட்சத்தை வரவு வைத்து மனோகர் மனோகர் என்பவர் நவீன் குமார் பெயரை ஏற்படுத்திய கிரைய உடன்படிக்கை பத்திரம் உண்டானது என்றால் சரிதான். என் முதல் விசாரணை சாட்சி நவீன் குமார் 1ம் பிரதிவாதி மனோகரனுக்கு பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் .

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)